11th March 1966]

கனம் திரு. பூ. கக்கன்: அந்த மாடுகள் நல்ல பால் கொடுக்கிற மாடுகள்தான். வமிச அபிவிருத்தி அதிகமாக ஏற்படுகிறது.

அரசாங்க மருத்துவ மனைகள்

* 248 **கேள்வி.—திரு. பி. முருகையன்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆலங்குடியிலுள்ள அரசாங்க மருத்துவ மனைக்கு வேறொரு கட்டடம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், இன்னும் வேலை ஆரம்பிக்கப்படாமைக்குக் காரணமென்ன?

(உ) மேற்படி வேலை எப்போது தொடங்கப்படும்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) முதல் (உ) வரை; ஆலங்குடியிலுள்ள அரசாங்க மருத்துவ மனைக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு தேவையான நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு வருகின்றன. இந்த கட்டடத் திட்டம் 1967-68-ம் ஆண்டில் II-ம் பாகத் திட்டமாக ஆலோசனை செய்யப்படும்.

* 249 **கேள்வி.—திரு. சி. சிவசுப்பிரமணியன்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் டவுன் அரசாங்க பெரிய ஹாஸ்பிட்டலை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கின்றதா?

(இ) ஆமெனில், அது எந்த நிலையிலுள்ளது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) & (இ) சிதம்பரம் அரசாங்க மருத்துவ மனைக்குப் புதிய இடத்தில் புதுக் கட்டடம் கட்டுவது 1966-67-ம் ஆண்டில் II-ம் பாகத் திட்டமாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

பஞ்சாயத்துக்களை நகரசபைகளாக மாற்றுதல்

* 250 **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் தலநிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பன்னுருட்டி, நெல்லிக்குப்பம் ஆகிய டவுன் பஞ்சாயத்துக்களை நகரசபைகளாக மாற்றும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கிறதா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) & (இ) ஆம். நெல்லிக்குப்பம், பன்னுருட்டி பஞ்சாயத்துக்களை நகரசபைகளாக மாற்றும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.